## September 6, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியாவில் ஏற்படும் மூன்றில் ஒரு பங்கு மரணங்களுக்கு இதய நோய்களே காரணம் என்பது ஆய்வறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.
   i. இந்திய பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகம் 'மரணம் ஏற்படுவதற்கான காரணங்கள் அடங்கிய அறிக்கை 2021-2023'- வெளியிட்டுள்ளது.
   ii. அந்த அறிக்கையின்படி, 2021-2023-ஆம் ஆண்டுவரை நாட்டில் நோய்கள் காரணமாக ஏற்பட்ட மரணங்களில் தொற்றா நோய்களால் 56.7 சதவீதம் உயிரிழந்தனர். இது 2020-22-ஆம் ஆண்டில் (கரோனா காலம்) 55.7 சதவீதமாக இருந்தது.
   iii. தொற்று, பிரசவம், பிரசவத்துக்கு முந்தைய காலம் மற்றும் ஊட்டச்சத்து சார்ந்த பிரச்னைகளால் 23.4 சதவீத மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இது கடந்த 2020-22-ஆம் ஆண்டு 24 சதவீதமாக இருந்தது.
   iv. 30 வயதுக்கும் மேற்பட்டவர்களில் உடல்நல பாதிப்பு ஏற்பட்டு நேரிடும் உயிரிழப்புகளுக்கு இதய நோய்கள் பிரதான காரணமாக உள்ளன.
   v. 15 முதல் 29 வயதுள்ளவர்களின் உயிரிழப்புக்கு உள்நோக்கத்துடன் காயம் ஏற்படுத்துதல்-தற்கொலை ஆகியவை மிகவும் பொதுவான காரணமாக உள்ளன.
2. தாய்லாந்தின் புதிய பிரதமராக பூம்ஜைதாய் கட்சியின் தலைவர் அனுதின் சான்விராகுல் நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்காக 492 உறுப்பினர்களைக் கொண்ட கீழவையில் நடைபெற்ற வாக்கெடுப்பில், 247 வாக்குகளுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
   i. இதுவரை நாட்டின் பிரதமராக இருந்த பேடோங்டார்ன் ஷினவத்ரா, அண்டை நாடான கம்போடியாவின் செனட் தலைவர் ஹுன் சென்னுடன் மேற் கொண்ட சர்ச்சைக்குரிய தொலைபேசி உரையாடல் வெளியே கசிந்ததால், நெறிமீறல் குற்றச்சாட்டின் பேரில் அரசியல் சாசன நீதிமன்றம் அவரை கடந்த வாரம் பதவியில் இருந்து அகற்றியது.
3. வீடு வாங்கியதில் பிரிட்டனின் துணைப் பிரதமர் ஏஞ்சலா ரெய்னர் வரி ஏய்ப்பு செய்ததாக விசாரணை அறிக்கை தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர் ராஜிநாமா செய்தார்.
   ii. முன்னதாக, இங்கிலாந்து பகுதியின் ஹோவ் நகரில் வீடு வாங்கியபோது, போதிய முத்திரை வரி செலுத்தவில்லை என்று அவர் ஒப்புக்கொண்டிருந்தார். பின்னர், அமைச்சர்களின் நெறிமுறை ஆலோசகர் லாரி மாக்னஸிடம் தன்னைத் தானே அவர் விசாரணைக்கு உள்படுத்திக்கொண்டார்.
   iii. பிரதமர் கியர் ஸ்டார்மரிடம் மாக்னஸ் சமர்ப்பித்த விசாரணை அறிக்கையில், ஏஞ்சலா ரெய்னர் 40,000 பவுண்டு (சுமார் ரூ.48 லட்சம்) வரிஏய்ப்புசெய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, துணைப் பிரதமர் பதவியில் இருந்து அவர் விலகினார்.
4. அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சகமான பென்டகனின் பெயர் போர்த் துறை என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

i. இதற்கான உத்தரவில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வெள்ளிக்கிழமை கையொப்பமிட்டார். புரட்சிகரமான ராணுவத் தலைவர் என்ற பிம்பத்தை வெளிப்படுத்தும் நோக்கில் அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

ii. இத்தகைய முடிவுகளுக்கு நாடாளுமன்ற ஒப்புதல் தேவைப்படும். எனவே, பென்டகனுக்கு தற்காலிக இரண்டாம் நிலைப் பெயராக இதைப் பயன்படுத்த டிரம்ப் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

iii. கடந்த 1789-இல் உருவாக் கப்பட்ட போர்த் துறை, பின்னர் 1947-இல் பாதுகாப்புத் துறையாக மாற்றப்பட்டது. தற்போது, அது மீண்டும் போர்த் துறையாக மாற்றப்படுவதை பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத் தனது சமூக ஊடகப் பதிவில் வரவேற்றுள்ளார்.

5. தென் கொரியாவில் தொடங்கும் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் 11 பேர் கொண்ட இந்திய அணி களம் காண்கிறது.

6. பிரச்னைகளுக்கு நியாயமாகவும் கண்ணியமாகவும் தீர்வு பெறப்படுவதை மத்தியஸ்த முறை உறுதி செய்யும் என்று உச்சநீதிமன்ற நீதிபதி சூர்ய காந்த் தெரிவித்தார். இது தொடர்பாக ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடை பெற்ற சர்வதேச மத்தியஸ்த மாநாட்டில் அவர் பேசியதாவது:

i. நீதிமன்ற அறைக்குள் மட்டுமே நீதி பரிபாலனம் செய்யப்பட வேண்டும் என்று வரையறைப்படுத்த முடியாது. மத்தியஸ்தம் நம்பிக்கையை வளர்க்கும். விரைவாகவும், அதிக இரக்கத்துடனும் தீர்வுகளை வழங்கும்.

ii. மத்தியஸ்தம் என்பது நீதிபெறுவதற்கான பாலமாக இருக்க முடியும்.

7. பாடலாசிரியர், கவிஞர் பூவை செங்குட்டுவன் (90) வெள்ளிக்கி ழமை (செப்.5) சென்னையில் காலமானார்.

i. சிவகங்கை மாவட்டம், கீழப்பூங்குடி கிராமத்தைச் சேர்ந்த இவரின் இயற்பெயர் முருகவேல் காந்தி. சேரன் செங்குட்டுவன் என்ற நாடகத்தைப் பார்த்து தனது பெயரை செங்குட்டுவன் என மாற்றிக் கொண்டார்.

ii. ஊர் பெயரையும் முன்னால் இணைத்து, 'பூவை செங்குட்டுவன்' என்ற பெயர் கொண்டார்.

iii. 1967-ஆம் ஆண்டுமுதல்திரைப் படத்தில் பாடல்கள் எழுதி வந்தார். பெரும்பாலும் பக்தி பாடல்கள் எழுதுவதில்தான் இவர் வல்லவர். ஆயிரக்கணக்கான திரைப்பட பாடல்கள், 4,000-க்கும் மேற்பட்ட தனிப்பாடல்கள், 2 படங்களுக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார்.

8. கப்பல் கட்டும் துறையில் உலகில் முதல் ஐந்து இடங்களில் ஒன்றாக இந்தியா உருவாகும் என மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தெரிவித்தார்.

i. தூத்துக்குடி வ.உ.சி. துறைமு கத்தில், பசுமை ஹைட்ரஜன் முன் னோடி ஆலை திறப்பு விழா நடைபெற்றது. மத்திய அமைச்சர் சர்வானந்த சோனோ வால் கலந்துகொண்டு பசுமை ஹைட்ரஜன் முன்னோடி ஆலை யைத் திறந்து வைத்தார்.

ii. தொடர்ந்து, ரூ.350 கோடி மதிப்பில் துறைமுகத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அமைச்சர் அடிக்கல் நாட்டினார். பின்னர், அமைச்சர் முன்னிலையில், தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம், கப்பல் சரி செய்யும் மையம் அமைப்பதற்காக தமிழக அரசுடன் புரிந்துணர்வுஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

iii. வ.உ.சி. துறைமுகத்தில் பசுமை ஹைட்ரஜன் திட்டம் ரூ.41,000 கோடி மதிப்பில் அமையவுள்ளது.

iv. வ.உ.சி. துறைமுகத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள ரூ.350 கோடி மதிப்பிலான திட்டங்கள் மூலமாக சுமார் 2,000 பேருக்கு நேரடியாகவும், சுமார் 5,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தத் துறைமுகத்தை பசுமைத் துறைமுகமாக மாற்றும் வகையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

v. நாட்டில் கடல்சார் மேம்பாட்டுத் திட்டம் 2047-இன் கீழ் வளர்ச் சித் திட்டங்கள் செயல்படுத்துவ தன் மூலமாக, கப்பல் கட்டும் துறையில் உலகில் முதல் ஐந்து இடங்களில் ஒன்றாக இந்தியா உருவாகும். இந்தியாவில் கடல்சார் வாணிபத் திட்டம் வலுவாக உள்ளதால், அமெரிக்காவின் வரி உயர்வு பற்றி கவலைப்படத் தேவையில்லை என்றார் அவர்.

9. ஹிமாசல பிரதேசத்தில் பெருவெள்ளம் மற் றும் நிலச்சரிவுகளால் 5.200-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந் துள்ளன. இதில் 1,000 வீடுகள் முழு மையாக இடிந்துவிட்டன.

i. 1200-க்கும் மேற்பட்ட சாலைகள் மூடப்பட்டுள்ளன. அதிகபட்சமாக மண்டியில் 281, சிம்லாவில் 261, குலுவில் 231 சாலைகள் மூடப்பட்டுள்ளதால் முடங்கியுள்ளது.

ii. இமயமலையையொட்டிய ஹிமாசல பிரதேசம், உத்தரகண்ட் மற்றும் ஜம்மு-காஷ்மீரில் கடந்த சில வாரங்களாக பலத்த மழையால் பெருவெள்ளமும் நிலச்சரிவுகளும் நேரிட்டுள்ளன. அண்டை மாநில மான பஞ்சாபும் வெள்ளத்தால் கடு மையாக பாதிக்கப்பட்டுள்ளது.

iii. ஹிமாசல பிரதேசத்தில் கடந்த ஜூன் 20-இல் இருந்து இதுவரை 45 மேகவெடிப்புகள், 95 பெருவெள் ளங்கள், 132 பெரிய நிலச்சரிவுகள் ஏற்பட்டு, ரூ.3.780 கோடிக்கும் மேற் பட்ட மதிப்பிலான சேதங்களை விளைவித்துள்ளது.